சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு – தீர்வை ஜாஸ்தி, பசலி ஜாஸ்தி ஆகியவற்றை நீக்கம் செய்வது மற்றும் தண்டதண்ணீர் வரியை நிர்ணயம் செய்வது, குறித்து நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 545

நாள்20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்:–

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.

(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள் செய்யவும், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் தீர்வை ஜாஸ்தி, பசலி ஜாஸ்தி ஆகியவற்றை நீக்கம் செய்வது, தண்ட தண்ணீர் வரியை நிர்ணயம் செய்வது குறித்து பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது:–

அ) பாசனப்பகுதியின் ஆயக்கட்டு அல்லாத பிற நிலங்களுக்கு, விவசாயிகள் விதிமுறைக்குப் புறம்பாக, அங்கீகரிக்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்களுக்கு சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய நீரின் அளவைப் பாதிக்கும் வகையில், முறையற்ற நீர்ப்பாசனம் செய்வதைத் தடுப்பதற்கு, உரிய பிற நடவடிக்கையுடன் ஆண்டு ஒன்றிற்கு தண்டத் தீர்வையாக ஏக்கர் 1–க்கு குறைந்தபட்சம் ரூ.200/– (அல்லது) எக்டேர் 1–க்கு குறைந்தபட்சம் ரூ.500/– வசூல் செய்யலாம்.

ஆ) தீர்வை ஜாஸ்தி, மற்றும் பசலி ஜாஸ்தி போன்ற ஏனைய தீர்வைகளை நீக்கலாம்.

த.பி.பா.

Verified RedEstate

3. நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன்படி முறையற்ற பாசனத்தை தடைசெய்ய விதிமுறைப்படி தொடர்ந்து தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், முறையற்ற பாசனத்திற்கு தண்ட (தண்ணீர் தீர்வை) தீர்வையாக எக்டேர் ஒன்றுக்கு ரூ.500/– (ரூபாய் ஐநூறு) வீதம் வசூலிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது. மேலும் தீர்வை ஜாஸ்தி மற்றும் பசலி ஜாஸ்தி ஆகிய தீர்வைகளை நீக்கம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இந்த நடைமுறையை 1420ம் பசலி ஆண்டு முதல் செயல்படுத்த வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை–5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை–18/35.

நகல்:
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை.9.
தலைமைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு),
சேப்பாக்கம், சென்னை–5.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
24/10/18

Verified RedEstate